105

# வ.உ.சியின் மெய்யறச் சிந்தனை: எண்ணங்களும் ஓட்டங்களும்

**பேராசிரியர். (செல்வி) செ. சிவசுப்பிரமணியம்**
தமிழ்த்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியம், தமிழர் கல்வி, தமிழர் வரலாறு, தமிழர் அறம் முதலான துறைகளில் பணியாற்றிய இலக்கிய கர்த்தாக்கள் குறித்த ஆய்வுகள் காலத்துக்குக் காலம் பலராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்கள் குறித்த ஆய்வுகள் மேற்கூறப்பட்ட துறைகளில் பணியாற்றிய ஆளுமைகளின் படைப்பிலக்கியம் சார்ந்தே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றைத் தாண்டி இவ்வாறான இலக்கிய கர்த்தாக்களின் ஆக்கங்கள் அக்காலத்து மொழி, கல்வி, இலக்கியம், சமூகம், அவர்களது படைப்பிலக்கியம் முதலான துறைகளின் வரலாறாகவும் அமைந்து விடுகின்றன. அந்தவகையில் வ.உ.சி தமிழ்ப்புலமை மரபின் முக்கிய இலக்கிய கர்த்தாக்களுள் ஒருவராகக் கருதப்படுகின்றார். இவர் சுதந்திரப் போராட்ட வீரர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், மொழிபெயர்ப்பாளர், கவிஞர், படைப்பிலக்கியவாதி, அரசியல்வாதி என இலக்கிய உலகில் பல துறைகளில் பணியாற்றியுள்ளார். இவரது படைப்புக்களை நுணுகி நோக்கும் போது தனித்துவமான இரு அம்சங்கள் முனைப்புற்று நிற்பதனை இனங்காணலாம். ஒன்று அவரது ஆராய்ச்சி மனப்பான்மை மற்றையது அவற்றுள் காணப்படும் எளிமைத்தன்மை என்பனவாகும். அந்தவகையில் இந்த ஆய்வானது வ.உ.சியினுடைய மெய்யறம் தமிழர் வாழ்வியலில் எவ்வளவு தூரம் செல்வாக்குப் பெற்றுள்ளது என்பதை வெளிக்கொணரும் விதமாக அமையப்பெற்றுள்ளது. திருக்குறளில் கூறப்பட்ட அறக்கருத்துக்கள் வ.உ.சியின் மெய்யறத்தில் எவ்வாறான தாக்கத்தைச் செலுத்தியுள்ளன என்பதனை வெளிக்கொண்டு வருவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். விபரண மற்றும் பகுப்பாய்வு, திறனாய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள்: மெய்யறம், தமிழர் வாழ்வியல், இலக்கிய கர்த்தா

**அறிமுகம்**

வ.உ.சிதம்பரப்பிள்ளை அவர்கள் படைப்பிலக்கியங்கள் பலவற்றைத் தமிழ் மக்களின் வாழ்வுக்கும் பரலோக வாழ்வுக்கும் ஏற்றவகையில் கட்டமைத்துள்ளார். அவர் ஒரு அரசியல்வாதியாக இருந்தபோதிலும் அவரது உள் ஆன்மா மெய்யறிவு பெற்றதாகவே காணப்பட்டது. வாழும்போதே முக்திநிலையடைந்தவராகக் (வாழும்போதே

மெய்நிலையடைதல்) காணப்பட்டார். இதனை உயர்ந்த ஆன்மாக்கள், உயர்ந்த ஞானிகள் பேசக் கேட்டிருக்கிறோம். இதனால்தான் அவராலே மெய்யறிவு, மெய்யறம் பற்றி எழுதமுடிந்தது. இந்த ஞானத்தினால்தான் சிவஞானபோதத்திற்கு அவரால் உரை காணமுடிந்தது. இவ்வாய்வானது வ.உ.சிதம்பரப்பிள்ளையின் மெய்யறம் பற்றிய நோக்கு என்பதாக அமைகின்றது.

வ.உ.சி வாழ்ந்த காலப்பின்னணி பற்றி நோக்குவது அவசியமாகும். அவரது முன்னோர்கள் தமிழ்ப் புலவர்களாகக் காணப்பட்டனர். அவரது குடும்பம் தமிழ்மீது அளவுகடந்த பற்றுக் கொண்டவர்கள். ஆத்திசூடி, உலகநீதி, கொன்றைவேந்தன், வேற்றிவேற்கை, நளவெண்பா, மூதுரை ஆகிய அறநூல்களைச் சிறுவயதிலிருந்து கற்றுத் தேர்ச்சிபெற்றார். மேலும் திருவிளையாடற் புராணம், நீதிக்கதைகளை மனவிருப்புடன் கேட்டறிவார். இத்தகைய பின்புலம்தான் அவரை மெய்யறிவாளனாகவும் அறவாளனாகவும் வாழ வழிகாட்டியது எனலாம். இவர் எழுதிய நூல்களாக அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், மனம்போல வாழ்வு, மெய்யறிவு, மெய்யறம், சுயசரிதை, தனிப்பாடல் திரட்டு என்ற கவிதைத் தொகுப்புக்களை யாத்துள்ளார்.

திருக்குறள் கூறும் அறிவு, அறம் போன்ற கருத்துகள் வ.உ.சியின் மனதை மிகவும் கவர்ந்தன. அறத்தை அடிப்படையாகக் கொண்டே மக்கள் வாழவேண்டும் என்ற அறக்கோட்பாட்டை வலியுறுத்தினார். அறமே மெய்யறிவுக்கு வழிவகுக்கும் என்பதைக் கூறியுள்ளார். இந்தப் பின்புலத்திலேதான் மெய்யறம் என்ற கவிதையை யாத்துள்ளார்.

மெய்யறம் என்ற கவிதையானது ஐந்து பகுதிகளாகக் கட்டமைக்கப் பட்டுள்ளது. மெய்யறம் என்ற சொல் மெய், அறம் என்ற சொற்களா லானது. மெய் என்பது உண்மை என்ற கருத்துடையது. அறம் என்பது தர்மத்தின் வழியில் செல்வது. எனவே மெய்யறம் என்பது உண்மையை தர்மத்தின் வழியில் சொல்லுவது ஆகும். மெய்யறமானது மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணரியல், மெய்யியல் என்ற பகுதிகளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. 125 அதிகாரங்களையும் 1250 வரிகளையும் கொண்டமைகின்றது. மாணவர் கடமை, தன்னை அறிதல், மெய்யைத் தொழுதல், தீயவற்றை விலக்குதல், ஆசிரியரை அடைதல், உடம்பை வளர்த்தல், கொலை, களவு, சூது இவற்றை விலக்குதல், பொய்யை நீக்குதல், பயனில்லாத சொல்லை நீக்குதல், பொறாமையை விலக்குதல், நடுவுநிலைமை, தொழில் அறிதல், திருந்தச் செய்தல், அடக்கவுடைமை, அறிவுடைமை, ஊக்கமுடைமை என்ற விடயங்களை மாணவரியல் என்ற அதிகாரத்தில் குறிப்பிடுகின்றார். மாணவர் நிலையே அவர்களது பிற்காலப் பகுதியைத் தீர்மானிப்பது. அதில் எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். எவற்றை நீக்கவேண்டும் என்று புதிய பாணியில் குறிப்பிடுகின்றார். திருவள்ளுவர் பொதுவாகப் பல அதிகாரங்களில் மக்களுக்குக் கூறிய அறங்களை வ.உ.சி மாணவர்களுக்கு ஏற்ற விதத்தில் விரித்துரைப்பது புதிய பாணியாக அமைகின்றது. கொலை, களவு

விலக்கலைத் திருவள்ளுவர் துறவறவியலில் கூற, வ.உ.சி மாணவப் பருவத்தில் களையவேண்டும் என்கிறார்.

அடக்கமுடைமை, நடுவுநிலைமை, அழுக்காறு என்பவற்றை வள்ளுவர் அறத்துப்பால் இல்லறவியலில் கூறுவது நோக்கத்தக்கது.

*'கொலை பாதகங்களுட் டலையாய தென்ப*

........................................

*கொலை புரிவார்க்கிங் கிலை பதியருளே'(வ.உ.சி, மெய்யறம், அதிகாரம் 09)*

கொலை என்பது பாதகங்களுள் பொல்லாதது. அதனைத் தவிர்க்க வேண்டும் என்றும் கொலை புரிவார்க்கு தெய்வ அருள் கிட்டாது என்றும் விதந்துரைப்பது சிந்தனைக்குரியது.

உடம்பை வளர்த்தல் பற்றி ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*'உடம்பை வளர்த்தல் அஃது உர முறச் செய்தல்*

*உளந் தொழில் செயற்கு முடலுரம் வேண்டும்'*

*(வ.உ.சி, மெய்யறம், அதிகாரம் 10)*

உடம்பை நல்லபடியாக வளர்த்தல் வேண்டும். உடல் ஆரோக்கியமாக உரமாக இருந்தால்தான் மனமாரத் தொழிலைச் செய்யமுடியும் எனவும் நோய்வாய்ப்பட்டால் மருந்துண்ண வேண்டும் எனவும் கூறுகிறார். ஆனால் திருவள்ளுவர் உணவே மருந்து என்பார். உணவு அளவாக உண்ணவேண்டும் என்பார். வ.உ.சி மூன்று பொழுதும் உணவினை மாறுபடாமல் உண்ணவேண்டும் என்கிறார்.

இல்வாழ்வு என்ற அதிகாரத்தில் இல்வாழ்வின் உயர்வு, இல்லம் அமைத்தல், உயிர்த்துணை, இன்பம் அனுபவித்தல், பரத்தையை விலக்கல், பரத்தனை விலக்கல், பெரியாரைத் துணைக்கொளல், பேதமை ஒழித்தல், உற்றாரைப் பேணுதல், விருந்தினரைப் பேணுதல், புதல்வரைப் பெறுதல், அன்பு வளர்த்தல், ஈகை புரிதல் என இல்வாழ்க்கைக்கு உரியவற்றை கவிதையில் கவிஞர் குறிப்பிடுகின்றார்.

திருவள்ளுவர் அறத்துப்பால் இல்லறவியலில் கூறியவற்றை வ.உ.சி இல்வாழ்வியலில் கூறுவது குறிப்பிடத்தக்கது. இல்லத்தின் அமைவிடம் பற்றித் திருக்குறளில் குறிப்பிடாத ஒன்றை வ.உ.சி குறிப்பிடுவது புதுமையான விடயமாகும்.

*'அகல நீள மரைக்கான ;மைல்கொளல்*

*ஈரிரு புறமதி லெதிரெதிர் வழிசெயல்*

........................................

*இல்லிற் கீராயிரமடி சதுரமாம்'*

*(வ.உ.சி, மெய்யறம், இல்லமைத்தல், அதிகாரம் 32)*

மற்றவர்கள் குறிப்பிடாத மனையடிச் சாத்திரத்தை முன்வைக்கிறார். மனையடிச் சாத்திரத்தில் தேர்ச்சிபெற்றவர் என்பது தெளிவாகின்றது.

வ.உ.சி திருக்குறளில் இல்லறவியலில் குறிப்பிட்ட சிலவற்றை மீண்டும் அதே தலைப்பில் ஒத்தும் வேறான கருத்துடனும் விளக்குகின்றார்.

*'விருந்தினர் முன்னர் தெரிந்திலாப் புரியவர்*

*விருந்தினரைப் பேணுவார் பெருந்தகையோரே'*

*(வ.உ.சி, மெய்யறம், அதிகாரம் 53)*

வள்ளுவரும் விருந்தினர் என்பதைப் புதியவர் என்ற பொருளில் குறிப்பிடுவதை நோக்கலாம். புதியவர் என்பது தெரியாதவர்களுக்கும் விருந்து கொடுக்கவேண்டும் என்ற கொள்கையுடையவர்கள். தமிழர் விருந்தளிப்பதையே முதற்கடமையாகக் கொண்டனர்.

அரசியல் என்ற பகுதியில் அரசுநலம், சூழ்ச்சி புரிதல், தெரிந்து தெளிதல், ஒற்றாளுதல், படைக்கலம், படையமைத்தல், தூதுவிடல், அமர்செய்தல், அறம்புரிதல் என்ற வகையில் அரசியலைக் கட்டமைத்துள்ளார்.

*'அரசின் குடிக்கெலாம் மன்னையைா நிற்பது*

*அரசுயிர்த் துணையா வறனெலாஞ் செய்வது'*

*(வ.உ.சி, மெய்யறம், அதிகாரம் 69)*

அரசு குடிகளுக்கெல்லாம் அன்னை போன்றது. அவர்களுக்கெல்லாம் உயிர்த்துணையாக நிற்பது போன்ற அரசின் செயல்களை அரசியலில் முன்வைக்கின்றார். அரசர் அறம் செய்பவராகப் பொதுவுடைமை வாதியாகச் செயற்படவேண்டும் என்கிறார். திருவள்ளுவரைப் பின்பற்றிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

நான்காவது அதிகாரமாக அந்தணரியல் அமைகின்றது. அதிகார வர்க்கமாக அந்தணர் காணப்பட்டனர். அதனால் அவர்களின் இயல்பு, ஒழுக்கம், மானம் காத்தல், இன்னாசெய்யாமை, தவஞ்செய்தல், அருள்புரிதல் என்றவகையில் பகுத்து விளக்குகின்றார்.

*'அருளுடையார் மெய்ப்பொருள் அடைவது திடம்*

..............................................

*அருள் விடாதவரை மெய்ப்பொருள் விடாது உண்மை'*

*(வ.உ.சி, மெய்யறம், அதிகாரம் 120)*

அருள்தான் மெய்ப்பொருளை அடைவதற்கு உரிய வழியாகும் என்பதை வ.உ.சி வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

ஐந்தாவது இயல் மெய்யியல் என்பதாகும். மெய்யுண்மை, மெய்யின் அடக்கநிலை, மெய்யின் விளக்கநிலை, மெய்யுணர்தல், மெய்நிலை அடைதல் என்றவகையில் மெய்யியலைக் கட்டமைக்கின்றார். அறிந்து உள்ளுணர்தலை அனுபவம் என்கிறார். இடர் ஏற்பட்டபொழுது மெய்யிறையை உணர்கின்றனர் பலர் எனக் கூறுகின்றார். அறிவு என்பது ஒரு பொருள் என்பதால் மெய்ப்பொருளை விளக்குகிறார். இதனையே வ.உ.சி மெய்யறிவு என்கிறார். பதியின் உண்மை நிலையினை அடைதலையே மெய்யறிவு என்கிறார். ஒழுக்கமுடையவர்கள் மெய்ப்பொருளை அறிவர் என்கிறார்.

ஆணும் பெண்ணும் மாணவராவதற்கும் ஆசிரியராவதற்கும் தகுதி யுள்ளவர்கள் என வ.உ.சி குறிப்பிடுகின்றார். இதனூடாக ஆண், பெண் சமத்துவத்தை வேண்டிநின்ற ஒருவராக இவரை நோக்கலாம். பாரதி, பாரதிதாசன் போன்றோரும் ஆண், பெண் சமத்துவத்தை வேண்டிப் புரட்சி செய்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் வினைக்கோட்பாட்டை அல்லது ஊழ்க்கோட்பாட்டை மாணவர் இயலில் குறிப்பிடுகின்றார் நல்வினை செய்தால் இன்பமும் தீவினை செய்தால் துன்பமும் உண்டாகும். அதனைச் சேர்ப்பிப்பவர் மெய்ப்பொருள் என்று கூறுவார்.

பண்பு என்பது பாடறிந்து ஒருகுதல் என்பார். இதனை,

*'பாடறிந் தொழுகலே பண்பென மொழிய*

*பெரியார்க் கடங்கி யுரியவை வழங்குக*

*சிறியரை யடக்கி செய்வன செய்க'*

*(வ.உ.சி, மெய்யறம், அதிகாரம் 71)*

பெரியவர்களுக்கு அடங்கி அவர்க்கு உரியதை வழங்க வேண்டும். சிறியவர்களை அடக்கி அவர்களுக்கு உரியதைச் செய்யவேண்டும் என்கிறார். பண்பால் உலகம் உண்டென்பதை பொதுமறை கூறியுள்ளது.

ஒரு மனிதன் சிறப்பாக வாழ்வதற்கு ஏற்ற அறங்களைப் பின்பற்றி வாழவேண்டும். ஒரு மனிதன் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்றவகையில் மெய்யறத்தைப் போதிக்கின்றார். திருவள்ளுவரைப் பின்பற்றியும் சில விடயங்களைப் புதிய பாணியில் கட்டமைத்துள்ளார். மெய்யற வழியில் வாழ்கின்றவனே மெய்யறிவினைப் பெறமுடியும் என்பதே வ.உ.சியின் கருத்தாகும். வாழும்போதே மெய்யறிவுடன் வாழலாம் என்பதே வ.உ.சியின் சிந்தனையாக அமைந்திருந்தது.

**உசாத்துணை நூல்கள்**


1. திருக்குறள், (1984), பரிமேலழகர் உரை
2. சிதம்பரம்பிள்ளை. வ. உ., மெய்யறம், இராயப்பேட்டை, சென்னை.
3. சிதம்பரம்பிள்ளை. வ. உ., (1928), அகமே புறம், அகஸ்தியர் பிரஸ், சென்னை.
4. சிதம்பரம்பிள்ளை. வ. உ., (1964), மனம்போல் வாழ்வு, பாரிநிலையம், சென்னை.
5. சங்கரவள்ளிநாயகம். அ., (1994), வ.உ.சி வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
6. லீலாவதி. தி., (1986), தமிழ் தந்த வ.உ.சி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவகம், சென்னை.